# அறிவுறுத்தல் பத்திரம்

01. உங்கள் நிறுவனம் மற்றும் உங்கள் நிறுவனத்தின் கீழ் இணை நிறுவனங்கள் இருப்பின், அந்த நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களில் 2025 ஆம் ஆண்டில், **வருடாந்த** சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய அலுவலர்களின் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை **இணைப்பு II** இல் குறிப்பிட்டுள்ள படி 2025.06.30 ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு நிறுவனத் தலைவரினால் பொறுப்பேற்கப்படல் வேண்டும்.

02. சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்கள், ஒரு கடித உறையில் இடப்பட்டு சீல் வைக்கப்பட்டு, மேல் இடது பக்க மூலையில் **”இரகசியம்” – “சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுததல் பிரிவு” - CIABOC** எனக் குறிப்பிடப்படல் வேண்டும் மற்றும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை மேற்கொள்வோரின் பெயரினை கடித உறையின் முகப்பில் குறிப்பிட்டு இணைப்பு II இல் உள்ளவாறு உரிய நிறுவனத் தலைவருக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்க வேண்டியவர்களுக்கு நிறுவனத்தலைவர் அறிவுருத்தல்களை வழங்குதல் வேண்டும்.

03. மேற்படி பாதுகாப்பான முறையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியுடன், நிறுவனத்தலைவரின் கீழ் உள்ள சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்கள் தொடர்பான தரவுத் தொகுதியில் அல்லது பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு நிறுவனத்ததின் தலைவரால் பராமரிக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பில் ஆணைக்குழுவினால் தகவல் கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் நிறுவனத் தலைவர்கள் தகவல்களை வழங்க ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகினறீர்கள்.

04. அதன் பின்னர் அனைத்து வெளிப்படுத்தல்களும் 2025.07.07 அன்று அல்லது அதற்கு முன்னர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் **சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தல் பிரிவுக்கு நேரடியாக வருகை தந்தோ** அல்லது **கூரியர் மூலம்** அல்லது **பதிவு செய்யப்பட்ட தபால் மூலம்** அனுப்பி வைப்பதற்கு நிறுவனத்தலைவர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

05. சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்கள் தொடர்பான ஆவணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

5.1 சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்கும் முறைமைகளை உள்ளடக்கிய 2025 ஆம் ஆண்டிற்கான சுற்று நிருபம்

5.2 சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்கள் படிவம் (இணைப்பு I இதனை எமது உத்தியோகபூர்வ இணைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்)

5.3 சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்க வேண்டிய நபர்களின் பட்டியல் **(இணைப்பு II)**

5.4 சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்க பிணைக்கப்பட்டுள்ள சந்தர்பங்கள் **(இணைப்பு III)**

மேற்படி சுற்று நிறுபம் மற்றும் தொடர்புடைய இணைப்புகளை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து (www.ciaboc.gov.lk) மூன்று மொழிகளிலும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை பூரணப்படுத்துவது தொடர்பான வழிகாட்டல் குறிப்புக்கள் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து உங்கள் பயன்பாட்டிற்காக பெற்றுக் கொள்ளலாம்

06. இதனுடன், உங்கள் அமைப்பின் கீழ் ஏதேனும் இணை நிறுவனங்கள் இருந்தால், அந்த நிறுவனங்களிலும் வருடாந்த சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்க வேண்டிய அலுவலர்களின் விபரங்களை பின்வரும் படிவத்தில் உள்ளவாறாக பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு அறியத் தருகினறேன்.

**படிவம் 01**

| தொடர் இல | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | நிறுவனத்திலுள்ள மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை | |
| 02. | வருடாந்த சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்க வேண்டிய அலுவலர்களின் எண்ணிக்கை | |
| 03. | 2025.06.30 திகதி அல்லது அதற்கு முன்பு சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை சமர்ப்பித்த அலுவலர்களின் எண்ணிக்கை | |
| 04. | 2025.06.30 திகதி அல்லது அதற்கு முன்பு சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்க தவறிய அலுவலர்களின் எண்ணிக்கை | |

படிவம் 01 தொடர்பான தகவல்கள் மற்றும் 2025.03.31 தேதியின்படியான 2025.06.30 தேதியில் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை சமர்ப்பிக்காத அலுவலர்களின் பெயர்களை உள்ளடக்கிய பட்டியல் ஒன்றின் மென் பிரதியை வெவ்வேறாக 2025.07.07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு MS Excel மூலம் (PDF) செய்யாது ஆங்கில மொழியில் assets@ciaboc.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இதன் மூலப் பிரதியை சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் போது அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகினறீர்கள்.

**படிவம் 02**

| Serial No. | Recipients of the Declaration | Full Name | Designation | Institution | NIC | TIN | Mobile Number | Email |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

மேலதிகமாக, படிவம் 02 இல் உள்ளவாறான மென்பிரதி ஒன்றினை 2025.05.30 ம் திகதி அல்லது அதற்கு முன்பு MS Excel மூலம் (PDF) செய்யாது ஆங்கில மொழியில் assets@ciaboc.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இதன் மூலப் பிரதியை சொத்துக்கள் பொறுப்புக்கள்

வெளிப்படுத்தல்களை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் போது அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகினறீர்கள்.

07. உங்கள் நிறுவனத்தில் மற்றும் நிறுவனத்தின் கீழ் ஏதும் இணை நிறுவனங்கள் இருந்தால், அந்த நிறுவனங்களையும் நேரடியாக தொடர்பு கொள்ளும் விதத்தில் பொருத்தமான ஒருங்கிணைப்பாளர் ஒருவரை (பணிநிலை அல்லது தீர்மானம் மேற்கொள்ளும் மட்டத்தில் உள்ள அலுவலரை) பரிந்துரை செய்து, அவ் அலுவலரின் சகல விபரங்களையும் கீழ் காட்டப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் உள்ளவாறாக பூர்த்தி செய்து சமர்ப்பிக்க ஆவண செய்யுமாறு மேலும் உங்களுக்கு அறியத் தருகின்றேன்.

| **நிறுவனத்தின் பெயர்** | **பரிந்துரைக்கப்பட்ட அலுவலரின் பெயர்** | **நிரந்தர பதவி** | **தொலைபேசி இலக்கம்** | | **மின்னஞ்சல் முகவரி** | **பெக்ஸ் இல** |
|---|---|---|---|---|---|---|
| | | | **கையடக்க** | **நிலையான** | | |
| | | | | | | |

08. மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் மற்றும் உங்கள் நிறுவனத்தின் கீழ் இயங்கும் இணை நிறுவனங்கள் இருப்பின் அந்த நிறுவனங்களின் சரியான முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்களைக் குறிப்பிடும் ஆவணத்தை தயாரித்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இல. 36, மலலசேகர மாவத்தை கொழும்பு 07 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.